## 37

# புறக்கணித்தலைக் கையாள்வது எப்படி

## லூக். 4:16–31, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*வரவிருந்த மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் அவரது மகிமை, அவரது வல்லமை, மற்றும் அவர் செய்யவிருந்த அற்புதமான விஷயங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது. இருப்பினும், உணர்வெழுச்சிமிக்க இந்த முன்னுரைத்தல்களின் மத்தியில், வினோதமான குறிப்பு ஒன்றைத் தருகிற வசனப்பகுதி ஒன்றுள்ளது: ஏசாயா 53:3, அவர் ''அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாக'' இருப்பார் என்று கூறுகிறது. KJV வேதாகமம், அவர் "மனிதர்களால் புறக்கணிக்கப்படுவார்'' என்று கூறுகிறது. மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களினூடாக, புறக்கணிக்கப்படுதல் என்ற ஆய்வுப் பொருளாகிய நூலிழை ஓடுகிறது.*

*அந்தப் புறக்கணித்தல் பற்றிக் கிறிஸ்துவே பேசியுள்ளார். வரவிருந்தவற்றிற்கு அவர் தமது சீஷர்களைத் தயார் செய்து கொண்டிருக்கையில், "அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டும்'' என்று கூறினார் (மாற். 8:31). அவர், "... அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது'' என்று கூறினார் (லூக். 17:25).*

*புறக்கணிக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்களில் இயேசு முதலாமவரல்ல. எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகள் பிரசங்கிக்கும்படி கட்டளையிடப்பட்டார்கள், ஆயினும் அவர்களையும் அவர்கள் செய்திகளையும் மக்கள் புறக்கணிப்பார்கள் என்றும் அவர்களுக்குக் கூறப்பட்டது. இதனுடன் அவர்கள் போராடினார்கள். மீண்டும் மீண்டுமாக எரேமியா உண்மையில், "நான் எனது ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய விரும்புகின்றேன்!'' என்று கூறினார்.[1]*

*நம்மில் பெரும்பான்மையானோரின் விருப்பப்படாத விஷயங்கள் எல்லாவற்றிலும், புறக்கணிக்கப்படுதல் என்பது பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.[2] நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, பல்வகையான உற்பத்திப் பொருட்களை அவற்றின் உற்பத்தியாளர்களால் அளிக்கப்படும் பரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக, வீடுவீடாகச் சென்று விற்றேன். நான்*

மருந்து எண்ணெய், விதைகள், வாழ்த்து அட்டைகள் மற்றும் வீடு பராமரிப்பு பற்றிய பத்திரிகைகள் ஆகியவற்றை விற்றேன். இந்த விற்பனையின்போது, “வேண்டாம்” என்று சொல்லப்படுவதுதான் மிகவும் கடினமான பகுதியாக இருந்தது. கதவருகில் நடந்துசென்று, படபடக்கும் குரலில், “நீங்கள் இதை வாங்கவிரும்புவதில்லையா?” என்று கூறுவதே எனது அடிப்படையான அணுகுமுறையாக இருந்தது. புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

நான் மீண்டும் முப்பது அல்லது நாற்பது வயதுள்ளவனாயிருத்தல் பற்றிப் பொருட்படுத்த மாட்டேன் ஆனால் நான் மீண்டும் என் வாலிபப் பிராயத்திற்குத் திரும்புவதற்குப் போதுமானதை உங்களால் எனக்குச் செலுத்த இயலாது ... ஏனென்றால், வாலிபப் பிராயத்துப் பையன்கள் வாலிபப் பெண்களிடம் தங்கள் நேசத்தைக் கூற வேண்டியுள்ளது ... இது புறக்கணித்தலை வரவேற்பதாயிருக்கும். நான் எப்படியோ தைரியத்துடன் ஒரு பெண்ணிடம் அவளை விருந்துக்கு அழைத்த அந்த ஒரு வருத்தமான நிகழ்ச்சி இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. அவள் ‘‘இல்லை’’ “முடியாது” என்று கூறிவிட்டாள். புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

இன்றைக்கான சத்தியம் பத்திரிக்கைக்கான என் பணிகளுடன் கூடுதலாக, நான் தன்னிச்சையாகவும் எழுதி வருகின்றேன். எழுதுவது என்பது [எனக்கு] கடினமான பணியாக இருப்பதில்லை; ஆனால் புறக்கணித்தலின் சிறு காகிதத் துண்டுகளே கடினமானவைகளாக உள்ளன - அந்தக் குளிர்வான, உணர்வற்ற சிறு காகிதத் துண்டுகள், “நீங்கள் எழுதியுள்ளவற்றின்மீது நாங்கள் ஆர்வமாயிருக்கவில்லை” என்று கூறுகின்றன. புறக்கணித்தலை நான் வெறுக்கின்றேன்.

புறக்கணித்தலை நீங்களும் விரும்புவதில்லை என்று நான் யூகிக்கப் போகின்றேன். விற்பதைப் பற்றியோ, அல்லது ஒரு வேலைக்கு விண்ணப்பிப்பது பற்றியோ அல்லது நமது திருமண உறவினர்களுடன் நட்புறவாயிருத்தல் பற்றியோ எதைப் பற்றிப் பேசினாலும், புறக்கணிக்கப்படுதலை எவரொருவரும் விரும்புவதில்லை. உங்களில் சிலர், உங்கள் பெற்றோரால் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையால் அல்லது உங்கள் பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுதல் என்றால் எப்படியிருக்கும் என்பதை அறிந்திருக்கலாம். புறக்கணிக்கப்படுதல் என்பது வேதனைமிகுந்ததாக உள்ளது, அல்லவா?

லூக்கா 4:16-31ல், இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் புறக்கணிக்கப்பட்டது பற்றிய வரலாற்றை நாம் காண்கின்றோம். 1955ம் ஆண்டில், ஒக்லஹாமாவில் உள்ள லோன் வுல்ஃப் என்ற இடத்தில் எனது முதல் சுவிசேஷக் கூட்டம் நடைபெற்றது. நான் வளர்ந்துகொண்டிருந்த காலத்தில், எங்கள் குடும்பமானது பல இடங்களில் மாற்றி மாற்றி வாழ்ந்துகொண்டிருந்தது, ஆனால் நான் ஐந்து ஆண்டுகள் அளவாக, லோன் வுல்ஃப் என்ற இடத்தில் பள்ளியில் பயின்றேன். எனது சிறு வயதுப் பருவத்துச் சொந்த ஊர் என்று எந்த ஊராவது தகுதிப்படுத்துப்படுமென்றால், அது லோன் வுல்ஃப் என்ற ஊராகவே இருக்கும். லோன் வுல்ஃப் என்ற ஊரில் நான் எனது தொடக்க காலப் பிரசங்க முயற்சிகளுடன் போராடிக்

*கொண்டிருக்கையில், அங்கிருந்த கிறிஸ்தவர்கள் எனக்கு மிகவும் ஆதரவு அளித்தார்கள் - ஆனால், அவர்கள் என்னைப் புறக்கணித்திருந்தால், என்ன நடந்திருக்கும்? ஒருவேளை இன்றைக்கு நான் பிரசங்கித்துக் கொண்டிருக்க மாட்டேன். இயேசு தமது "சொந்த ஊருக்கு" பிரசங்கிக்கச் சென்றபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார். ஒரு வகையில், நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்பட்ட விஷயமானது, அவர் யூத மக்களால் கடைசியில் புறக்கணிக்கப்படுவார் என்பதற்கு முன்கண்ணோட்டமாக இருந்தது.*

*கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டது பற்றிய வரலாறு, ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றிலும் காணப்படுகின்றது.*[3] *இவற்றில் முழுமையான விவரங்களைக் கொண்டுள்ள லூக்கா சுவிசேஷத்தை, நான் அடிப்படையாகப் பயன்படுத்துவேன். முதலில் நாம் இவ்வரலாற்றிலிருந்து எதைப் பெறக்கூடும் என்று காண்பதற்கு இதைப் பொதுவாகப் படிப்போம். பின்பு நான் பின்வரும் குறிப்பான கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்: "அந்தப் புறக்கணித்தலை இயேசு கையாளவும் தொடர்ந்து செல்லவும் முடிந்தது எவ்வாறு?"*

## இயேசு புறக்கணிக்கப்படுதல்

*நமது வேதபாடப்பகுதி, "தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து" என்று தொடங்குகிறது (வ. 16அ). நாசரேத்து என்பது இயேசு வளர்ந்த ஒரு சிறு ஊராயிருந்தது.*[4] *அது எருசலேமுக்கு வடக்கே, கலிலேயா மாகாணத்தில், யோர்தான் நதிக்கும் மத்திய தரைக்கடலுக்கும் ஏறக்குறைய நடுவில் இருந்தது.*

*"... தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து" (வ. 16ஆ). ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஜெப ஆலயத்திற்குச் செல்லுதல் என்பது கிறிஸ்துவின் வழக்கமாயிருந்தது.* The New Century Version *என்ற வேதாகமத்தில், "அவர் எப்பொழுதும் செய்தது போலவே ஜெப ஆலயத்திற்குச் சென்றார்" என்றுள்ளது. ஆராதனைக்கு விசுவாச நிறைவுடன் செல்லுதல் என்பது ஒரு பழக்கமாக இருப்பது மட்டுமின்றி, நாம் மேற்கொள்வதற்கான ஒரு நல்ல பழக்கமாகவும் உள்ளது.*

*பிற்காலத்திய ரபீத்துவ எழுத்துக்களில் இருந்து நாம், ஜெப ஆலய ஆராதனைகள் பற்றிச் சிலவற்றை அறிகின்றோம். எல்லாரும் சேர்ந்து ஷேமாவை (உபா. 6:4-9ல் இருந்து*[5]*) மனப்பாடமாக உச்சரிப்பதுடன் ஆராதனை தொடங்கும். பல ஜெபங்களுக்குப் பின்பு, நியாயப்பிரமாணத்திலிருந்து ஒரு பகுதி வாசிக்கப்படும். அடுத்ததாக தீர்க்கதரிசனங்களில் இருந்து ஒரு வாசிப்பு இருக்கும். ஊழியத்தின் அந்தப் பகுதியைச் செய்யும்படி இயேசு தாமாகவே முன்வந்தார் அல்லது அதை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்.*

*"... வாசிக்க எழுந்து நின்றார். அப்போது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது" (வ. 16இ, 17அ). அவரிடத்தில் அது "பணிவிடைக்காரனால்" (வ. 20) கையளிக்கப்பட்டிருக்கும்.* KJV*யில்* "minister" *(ஊழியர்) என்றுள்ளது;* The New Century Version *என்ற வேதாகமத்தில்* "assistant" *(உதவியாளர்) என்றுள்ளது.*[6] *"உதவியாளர்"*

*என்பவர் கட்டிடம் மற்றும் வேத வசனத்தின் பிரதிகள் உட்பட, கட்டிடத்தில் உள்ள பொருட்களுக்குப் பொறுப்பாளராய் இருக்கும்படி ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட்டிருந்த வேலையாளாக இருந்தார்.[7] இந்தப் பதவியில் இருந்த மனிதர்கள் ஆராதனை ஊழியங்களில் உதவி செய்தார்கள் மற்றும் ஓய்வுநாள் பாடசாலைகளிலும் அடிக்கடி உதவி செய்தார்கள். சில வகையில் இவர்கள் நமது உதவிக்காரர்களைப் போல் இருந்தார்கள்.*

*பணிவிடைக்காரர், "பேழை" என்று அழைக்கப்பட்ட ஒரு பெட்டியி லிருந்து ஏசாயாவின் புத்தகச் சுருளை எடுத்திருப்பார். புத்தகச் சுருள்கள் பெரியவைகளாயிருந்தன; அவைகளின் உருளைகள் மூன்று அல்லது அதற்கு அதிகமான அடிகள் நீளம் கொண்டிருந்தன. நீண்ட புத்தகமான ஏசாயாவின் புத்தகம் மட்டுமே சாதாரணமாக ஒரு சுருளில் இருக்கும். அம்மனிதர் அப்புத்தகச் சுருளை இயேசுவிடம் கையளித்தார்.*

*"அவர் புஸ்தகத்தை விரித்தபோது" (வ. 17 இ) "... என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு" (வ. 19ஆ). அவர் புத்தகச் சுருளை முன்பு வாசித்து முடித்திருந்த இடம் வரும் வரைக்கும் விரித்து, தாம் எதை வாசிக்க வேண்டும் என்பதைப் பரிசோதித்தறிந்து, தாம் வாசிக்க விரும்பிய வேத வசனப்பகுதியை கண்டறியும்படி புத்தகத்தை இடது அல்லது வலது புறமாகச் சுருட்டத் தொடங்கினார். அந்த நாட்களில் அதிகாரம் அல்லது வசனப்பகுதிகளைக் கொண்டிருந்தது இல்லை. கர்த்தர், தாம் விரும்பிய வசனப்பகுதியைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஏசாயாவின் புத்தகத்தில் அவர் எவ்வளவு நன்கு பழக்கப்பட்டவராக இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கின்றீர்களா? அவர் தாம் தேடிய பகுதியை - இன்றைய நாட்களில் ஏசாயா 61:1, 2 என்று அறியப்படும் வேத வசனப்பகுதியை - கண்டுபிடித்து அதை வாசித்தார்:*

> *கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி[8] என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப் படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் (வ. 18, 19).[9]*

*ஏசாயா புத்தகத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் மேசியாவைக் குறித்தனவா அல்லவா என்பது பற்றிச் சில கருத்து வேறுபாடு உள்ளது, ஆனால் இவ்வசனப்பகுதியைக் குறித்து அவ்வித மாறுபட்ட கருத்து எதுவும் இருப்பதில்லை. ஒவ்வொரு ரபீயும், இவ்வசனங்கள் மேசியாவைப் பற்றியே பேசின என்று நம்பினார்: மேசியா வரும்போது, தேவனுடைய ஆவியானவர் அவர்மீது இருப்பார். அவர் ஏழைகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார். அவர் "சிறைப்பட்டவர்களுக்கு" விடுதலையைக் கொண்டு வருவார். "சிறைப்பட்டவர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட*

*வார்த்தையாக இருந்தது. அவர் பார்வையற்றவர்களுக்குப் பார்வையை மீட்டுத் தருவார்.*

*மேசியாவின் ஊழியம் பற்றிய இந்தப் பட்டியலை நீங்கள் வாசிக்கையில், முதலில் இந்தச் சொற்றொடர்களை அவற்றின் நேரடியான கருத்தில் நினைத்துப் பாருங்கள் - ஏனென்றால் இங்கு குறிப்பிடப்பட்ட வழி வகைகளில் மனிதர்களுக்கு இயேசு நேரடியாகவே உதவி செய்தார். பின்பு இவற்றை ஆவிக்குரிய கருத்தில் நினைத்துப் பாருங்கள். "சிறைப்பட்டவர்களுக்கு" விடுதலையைக் கொண்டு வருவார் என்ற மேசியாவைப் பற்றிய குறிப்பானது, சாத்தானால் சிறைப்பட்டவர்களைக் குறிப்பதற்கு விசேஷித்த தனிச்சிறப்பு கொண்டுள்ளது. அது போலவே, உடல் ரீதியாகப் பார்வையற்று இருந்தவர்களை மட்டுமின்றி, ஆவிக்குரிய வகையில் பார்வையற்றிருந்தவர்களையும் இயேசு குணமாக்கினார்.*

*வேதபாடத்தின் அடுத்த பகுதி ஆர்வமுள்ளதாக இருக்கிறது: மேசியா, "நொறுங்குண்டவர்களை விடுதலையாக்குவார்." இந்தச் சொற்றொடர் ஏசாயா 61:1, 2ல் இருந்து வருவதற்குப் பதிலாக, 58:6ல் இருந்து வருகிறது. இயேசு இவ்விடத்தில் சற்று நிறுத்தி, இந்தக் குறிப்பு வரையிலும் புத்தகச் சுருளைப் பின்னாகச் சுருட்டி, இதை வாசித்து, பின்பு நாம் அதிகாரம் 61 என்று அறிகிற பகுதிக்கு மீண்டும் முன்னோக்கி வந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இதைச் செய்வதற்கு, இயேசுவுக்கு ஏசாயாவின் புத்தகம் எவ்வளவு நன்கு பழக்கப்பட்டதாக இருந்திருக்க வேண்டும் என்பதை மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்.*

*ஏசாயா 61ல் உள்ள வசனப்பகுதியானது, மேசியா "கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்துவார்" என்ற வாக்குத்தத்தத்துடன் முடிவடைந்தது (லூக். 4:19). "கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" என்ற சொற்றொடர், ஒரு நாட்காட்டி ஆண்டைக் குறிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக, ஒவ்வொரு விஷயமும் நேராக்கப்படும் ஒரு காலத்தைக் குறித்தது.*

*"கர்த்தருடைய அநுக்கிரக வருஷம்" என்ற கருத்து, யூபிலி ஆண்டு பற்றிய பழைய ஏற்பாட்டுப் போதனையின் அடிப்படையில் அமைந்திருக்கலாம்.[10] யூதர்கள் ஏழு ஆண்டுகளின் சுழற்சியின்படி இயங்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு ஏழாவது ஆண்டும், நிலமானது வெறுமையாக ஓய்ந்திருக்கும்படி விட்டுவிடப்பட வேண்டும். ஏழு ஆண்டுகளின் ஏழு சுழற்சிகளுக்குப் பின்பு - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், நாற்பத்தி ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு - வரும் அடுத்த ஆண்டான, ஐம்பதாம் ஆண்டு, யூபிலி ஆண்டாக இருக்க வேண்டியது. அந்த ஆண்டில், கடன்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும், அடிமைகள் விடுதலையாக்கப்பட வேண்டும், மற்றும் காணியாட்சி நிலங்கள் தொடக்கத்தில் பிரித்துத் தரப்பட்டிருந்த குடும்பங்களுக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும். யூபிலி ஆண்டு என்பது மக்கள் [தங்கள் செயல்பாடுகளை] மீண்டும் தொடங்கும் ஆண்டாக இருந்தது. ஏழு ஆண்டு சுழற்சிகள் மற்றும் யூபிலி ஆண்டு ஆகியவை பற்றிய இந்த அறிவுறுத்துதல்களை யூதர்கள் எந்த அளவுக்குக் கடைப்பிடித்தார்கள் என்பது நமக்குத்*

*தெரியாது, ஆனால், மேசியா வந்து எல்லாவற்றையும் சரியாக்கும் "ஆண்டினை" அவர்கள் எதிர்நோக்கியிருந்தார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.*

*இயேசு, ஏசாயாவின் புத்தகத்திலிருந்து வாசித்து முடித்தபோது, "[அவர்] ... புஸ்தகத்தைச் சுருட்டி" (வ. 20அ); வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் புத்தகச் சுருளைச் சுருட்டினார். அவர், "பணிவிடைக்காரனிடத்தில் [அதைக்] கொடுத்து," அவர் [பணிவிடைக் காரர்] அதை[புத்தகச் சுருளை]ப் பயபக்தியுடன் [பெட்டிக்குள்] வைத்திருப்பார்; பின்பு கர்த்தர் "உட்கார்ந்தார்" (வ. 20ஆ). (மனிதர்கள் வாசிக்க எழுந்து நின்று, போதிக்க உட்கார்ந்தார்கள்.) இயேசு, அப்பொழுது வாசிக்கப்பட்ட வசனப்பகுதிக்கு விளக்கம் தரத் தயாராயிருந்தார். "ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது" (வ. 20இ). அவரைப் பற்றிய ஏதோ சில விஷயங்கள், அவர் வாசித்த முறைமை பற்றிய ஏதோ சில விஷயங்கள், அவர்களின் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியிருந்தன. எதிர்பார்க்குதலின் காற்று சூழ்நிலை அங்கு இருந்தது. ஒவ்வொரு கண்ணும் இயேசுவின்மீது இருந்தது.*

*"அப்பொழுது அவர் அவர்களோடே பேசத் தொடங்கி, 'உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று' என்றார்" (வ. 21). உண்மையில் அவர், "இது கடந்த காலத்தில் நடந்த வற்றைப் பற்றியோ அல்லது எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றைப் பற்றியோ பேசுவதில்லை. இதன் நடைமுறைப் பயன்பாடு எருசலேம் அல்லது வேறு சில இடத்தில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சிக்குரியதாக இருப்பதில்லை. இது இங்கேயே, இப்போதே குறிப்பிடுகிறது. இந்த வேதவசனம் இன்றைக்கு நீங்கள் கேட்க நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று கூறினார். எளிய சொற்றொடரில் கூறுவதென்றால், இயேசு தாம் செய்த செயலே அவ்வசனப் பகுதியின் நிறைவேற்றமாயிருந்தது என்று கூறினார் - அதாவது, தாமே மேசியா என்று அவர் கூறினார்!*

*கிறிஸ்து தமது வாழ்வில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக நட்புறவு கொண்டிருந்த மக்களால் அந்த ஜெப ஆலயம் நிறைந்திருந்தது. அவர்களில் பலருடன் அவர் வளர்ந்திருந்தார். அவர்களை நேசிக்க அவர் கற்றிருந்தார். இது, அவர்கள் அவரை மேசியா என்று ஏற்றுக்கொண்டு, ஏசாயா எழுதி யிருந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் வாய்ப்பாக இருந்தது.*

*அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்தார்கள்? முதலில் "எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: 'இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா' என்றார்கள்" (வ. 22). அவர்கள் தாங்கள் நன்கு அறிந்திருந்த பையன் மற்றும் இளைஞனைப் பற்றிப் பேசுகையில் அவர்களின் திகைப்பை என்னால் கற்பனை செய்து காணமுடிகிறது: "இவன் செய்து கொடுத்த அலமாரியொன்று என் வீட்டில் உள்ளது!"; "இவன் பழுது நீக்கிக் கொடுத்த கலப்பை ஒன்று என்னிடம் உள்ளது!"; "இன்றைக்கு இந்தப் பையன் நல்ல வேலை செய்திருக்கின்றான் அல்லவா! இவ்வளவு நன்றாகப்*

*பேச இவன் எப்படிக் கற்றுக்கொண்டான்?" பின்பு அவர்கள் சிந்தைகளில் சந்தேகம் ஏறிற்று. இவ்வரலாற்றின் இப்பகுதியைப் பற்றி மத்தேயு ஒரு விரிவான விவரத்தைக் கொடுக்கின்றார்:*

> *... அவர்கள் ஆச்சரியப்பட்டு: "இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?[11] இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது?" என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள் (மத். 13:54ஆ-57அ; மாற். 6:3ஐக் காணவும்).*

*அவர்கள் மத்தியில் இயேசுவின் தொடக்க கால வாழ்வு பற்றிய உலகுசார்ந்த விவரங்கள், அவர் உண்மையில் யார் என்பதைக் காணாதபடி அவர்களைத் தடை செய்தன. அவர், அவர்களின் வீட்டு உபயோகப் பொருட்களைச் செய்து கொடுத்து அவர்களின் கருவிகளைப் பழுதுநீக்கிக் கொடுத்திருந்தார். அவர் நன்கு பேச முடிந்தது பற்றி அவர்கள் வியப்படைந் தார்கள், ஆனாலும் அவர் இன்னமும் "ஒரு உள்ளூர்ப் பையனாகவே" இருந்தார். அவர்கள் "இடறலடைந்தார்கள்," அவமானமடைந்தார்கள், கலக்கமடைந்தார்கள். "அவிசுவாசம்" என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது என்று மத்தேயுவும் மாற்குவும் நமக்குக் கூறுகின்றார்கள் (மத். 13:58; மாற். 6:6). அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பை கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் விசுவாசிக்க மறுத்தார்கள்.*

*அவர்களின் விமர்சனங்களை இயேசு அநேகமாகக் கேட்டிருக்கலாம். அத்துடன், அவர்களின் சிந்தனைகளை அவரால் வாசிக்க முடிந்தது (யோவா. 2:25). அவர், " 'வைத்தியனே, உன்னைத் தானே குணமாக்கிக் கொள்' என்கிற பழமொழியை ... நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள்" என்பது நிச்சயம் என்று பதிலளித்தார் (லூக். 4:23ஆ, இ). அந்தப் பழமொழி யானது, "எங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி செய்வதற்கு முன்பு உங்கள் சொந்தப் பிரச்சனைகளைக் கவனியுங்கள்" என்று சாதாரணமாக அர்த்தப்பட்டது. அது இவ்விடத்தில் சற்றே மாறுபட்ட கருத்துடன் பயன்படுத்தப்பட்டது. அவர்களின் சிந்தனைகளை எதிரொலிப்பதில் கிறிஸ்து தொடர்ந்து பின்வருமாறு கூறினார்: " 'கப்பர்நகூமில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய்' என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்" (வ. 23ஆ). "வைத்தியன்" பற்றிய பழமொழியானது, "நீ கப்பர் நகூமில் செய்ததுபோலவே இங்கும் அற்புதங்களைச் செய்து உன்னை ஒரு வைத்தியன் என்று நிரூபி" என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.*

*நாசரேத்தூரில் இருந்து இருபது மைல்களுக்கும் குறைவான தூரத்தில் இருந்த கப்பர்நகூமில், இயேசு செய்திருந்தவற்றை ஜெப ஆலயத்தில் இருந்தவர்கள் அறிந்திருந்தார்கள்.[12] அவர்கள் அநேகமாக அவரது பிற அற்புதங்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம் (லூக். 7:17ஐக்*

காணவும்). கிறிஸ்து அந்த மாகாணத்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் அவரைக் காணவும் அவர் உரைத்தவற்றைக் கேட்கவும் எண்ணற்ற வாய்ப்புக்களைப் பெற்றிருந்து இருப்பார்கள் (லூக். 8:1ஐக் காணவும்).[13] இதில் எதுவும் போதுமானதாக இருக்கவில்லை. அவர்கள் ஒரு விசேஷித்த அடையாளத்தை, தாங்கள் பார்க்க தங்களுக்காக மாத்திரமே ஒரு அற்புதத்தைக் கேட்டார்கள். இது விசுவாசத்தின் வெளிப்பாடாக இராமல், அவிசுவாசத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.

அவர்களிடத்தில் இயேசு, "ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்பட மாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (லூக். 4:24). மாற்கு சுவிசேஷத்தின்படி, "தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" என்றார் (மாற். 6:4). இந்தப் பழமொழி எப்போதுமே உண்மையாக இருப்பதில்லை, ஆனால் இது பொதுவாக உண்மையாக இருக்கிறது. அடிக்கடி, நாம் நமது வாழ்வு முழுவதிலும் அறிந்த நபர்களாயிருக்கும்போது, அவர்களின் சாதனைகளை ஏற்றுக்கொண்டு பாராட்டுதல் என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது.

கிறிஸ்து பின்வருமாறு தொடர்ந்து கூறினார்,

> அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்த போது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை (லூக். 4:25, 26).

உண்மையில் அவர், "நான் தீர்க்கதரிசிகளின் ஆவியில் வந்திருக்கின்றேன். எலியாவின் நாட்களில், தேவன் தீர்க்கதரிசியை நாட்டிற்கு வெளியே அனுப்பியிருந்தார். எலியா யூதர்களின் விதவைகளுக்கு உதவியிருக்க முடியும், ஆனால் அதற்குப் பதிலாகத் தேவன் சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவைக்கு உதவும்படிக்கு அவரை [எலியாவை] அனுப்பினார்" என்றே கூறினார்.[14]

கிறிஸ்து இன்னொரு விவரிப்பையும் கொடுத்தார்: "அல்லாமலும், எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும், சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை" (வ. 27). எலிசா, எலியாவின் பின்வரும் பதிலாளராக இருந்தார். அவர் யூதர்களில் இருந்த பல தொழுநோயாளர்களைக் குணமாக்கியிருக்க முடியும்; அதற்குப் பதிலாக, அவர் தேவனுடைய அருளிரக்கத்தினால், புறஜாதியாரான ஒரு தொழுநோயாளரைக் குணமாக்கினார். இயேசுவின் நாட்களில், நீங்கள் ஒரு யூதரைக் கோபப்படுத்த வேண்டுமென்றால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவன் புறஜாதியார் மீதும் அக்கறை கொண்டுள்ளார் என்று மறைமுகமாய் உணர்த்துவதேயாகும்!

கிறிஸ்துவின் உதாரணங்களுக்கு மக்கள் எவ்வாறு பதில்செயல்

*செய்தார்கள்? "ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்ட பொழுது, விசுவாசத்தினால் நிறைந்தார்கள்!" என்று வேதாகமம் கூறுகிறதா? மிகவும் அரிது! [இல்லவே இல்லை!] "ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்டபோது, கோபமூண்டு" என்று வாசிக்கின்றோம் (வ. 28).*

*"அவர்கள் ஜெப ஆலய ஆராதனையில் சாதாரணமாக நல்லொழுக்கம் உடையவர்களாய்க் கூடியிருந்ததை அவர்கள் கைவிட்டு, சிந்தையற்ற கும்பலாக மாறினார்கள்."[15] "எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்தி[ற்கு]க் கொண்டுபோனார்கள்" (வ. 29அ). நாசரேத்தூர், கலிலேயாவின் தெற்குப்பகுதியில் நீட்டிக்கொண்டிருந்த லீபனோனின் முகட்டில் கட்டப்பட்டிருந்தது. அந்தப்பகுதியில் இருந்த உயரமான பல இடங்கள் அவர்களின் கொலை வெறிமிக்க நோக்கத்திற்குப் பயன்பட்டிருக்கும்.*

*அவர்கள் இயேசுவை, ''மலையின் சிகரத்திலிருந்து [அவரைத்] தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள்'' (வ. 29ஆ). தாமே மேசியா என்று அவர் மறைமுகமாக உணர்த்தியிருந்ததால், அவர்கள் ஒருவேளை அவரை தேவதூஷணத்தின் குற்றவாளி என்று தீர்ப்பிட்டிருக்கலாம், அது கல்லெறிந்து கொல்லப்பட வேண்டிய பாவமாக இருந்தது (லேவி. 24:16). பொதுவாகக் கல்லெறிதல் என்பது கல்லுகளைப் பொறுக்கி, குற்றவாளியின்மீது வீசியடிப்பதினால் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் சிலவேளைகளில், குற்றவாளியை மலைச் சிகரத்திலிருந்து தள்ளிவிட்டு, அவர்மீது பெருங்கற்கள் உருட்டி விடப்படுவதுண்டு. பிந்திய இந்தத் தண்டனைதான் நாசரேத்தூரின் குடிமக்களின் சிந்தையில் இருந்திருக்கும்.*

*அவர்களின் நோக்கம் எதுவாயிருப்பினும், வசனம் 30, ''அவரோ அவர்கள் நடுவினின்று கடந்து போய்விட்டார்" என்று கூறுகிறது. அவர் (தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது காசுக்கடைக்காரர்கள் இருந்தது போன்ற நிலையில்) அவரைக் கண்டவர்கள் அதிர்ச்சியில் மூழ்கி ஒன்றும் செய்ய முடியாதவர்களாகும்படிக்கு தமது ஆளுமைத்தன்மையின் முழு செயல்தாக்கமும் காணப்படும்படி அனுமதித்தாரா?[16] அல்லது அவர் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினாரா? நாம் ஒருக்காலும் - குறைந்தபட்சம் இந்த வாழ்வில் - இதைப்பற்றி அறியமாட்டோம். அவரது "வேளை" இன்னும் வராதிருந்தபடியால் (யோவா. 7:30; 8:20 ஆகிய வசனங்களைக் காணவும்), அவசியமானது எதுவோ, அதை அவர் செய்தார். பின்பு அவர் நாசரேத்தூரை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். நாம் அறிந்த வரையில் இதுவே அங்கு அவர் வந்த கடைசி முறையாக இருந்தது.[17]*

## புறக்கணிக்கப்பட்டதை இயேசு எவ்வாறு கையாண்டார்?

*என்ன ஒரு கவலைமிகுந்த வரலாறு: இயேசு தமது சொந்த ஊரில் புறக்கணிக்கப்பட்டார்! இயேசு இதனை எவ்வாறு கையாண்டார் என்பதே*

இவ்வேளையின் கேள்வியாக உள்ளது. கிறிஸ்துவை, புறக்கணித்தல் என்பதைச் சந்திக்கவும் வெற்றிகொள்ளவும் வல்லமையுள்ளவராக்கியது எது? நமது வழியில் புறக்கணித்தல் வரும்போது, நீங்களும் நானும் அதை எவ்வாறு கையாள முடியும்? இங்கு நமது வேத பாடப்பகுதியுடன் தொடர்பான ஏழு கருத்துக்கள் உள்ளன:[18]

1. அவர் புறக்கணிக்கப்படுதலை எதிர்பார்த்திருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது (மாற். 8:31; லூக். 17:25ஐக் காணவும்). அது அவரது ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எதையும் சாதிக்க முயற்சி செய்யாதிருப்பது ஒன்றுதான் புறக்கணிக்கப் படுதலைத் தவிர்ப்பதற்கான ஒரே வழியாகும். நீங்கள் உங்கள் கையை ஒருபோதும் வெளியை நீட்டாதிருந்தால், உங்கள் கை ஒருக்காலும் வெட்டப்படாது - ஆனால் நீங்கள் ஒன்றையும் சென்றடையவும் முடியாது. புறக்கணிக்கப்படுதலை எதிர்பார்த்திருந்தமையானது இயேசுவை மனரீதியாக ஆயத்தப்படுத்திற்று.

2. அவர் தேவனுடன் ஒரு விசேஷித்த உறவு கொண்டிருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. அந்த உறவு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் உள்ளடக்கமாய் இருந்தது: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்'' (லூக். 4:18; அப். 10:38ஐக் காணவும்). அந்த அபிஷேகம் இயேசுவின் ஞானஸ் நானத்தின்போது நடைபெற்றது, அப்போது ஆவியானவர் அவர்மீது இறங்கி வந்தார் (லூக். 3:22). அந்த வேளையிலிருந்து, கிறிஸ்து எப்போதும் ''ஆவியானவரால் நிறைந்தவராய்'' இருந்தார் என்று லூக்கா காண்பிக் கின்றார் (4:1; வ. 14ஐக் காணவும்). அவர் தமது ஜெப வாழ்வின் மூலம் அந்த உறவைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டார் (5:16; 6:12; 9:28; 11:1). அவர் மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டாலும்கூட, தேவனால் புறக் கணிக்கப்பட்டிருந்ததில்லை என்பதை அவர் எப்போதும் அறிந்திருந்தார் (2 தீமோ. 4:16, 17ஐக் காணவும்).

3. அவர் தொடர்ந்து ஜெப ஆலய ஆராதனையில் கலந்துகொண்டிருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. ஜெப ஆலயத்திற்குச் செல்வது என்பது கிறிஸ்துவின் வழக்கமாக இருந்தது என்பதை நாம் முன்பே கண்டோம். ''நான் பொதுவான ஆராதனை ஊழியத்தில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமில்லை'' என்று யாரேனும் ஒருவரால் உண்மை நிறைவுடன் கூற முடியுமென்றால், அவர் இயேசுவாக மட்டுமே இருக்க முடியும். இருந்தபோதிலும், வேதாகமத்தைப் படிக்கவோ அல்லது தேவனை ஆராதிக்கவோ, தேவனுடைய மக்கள் ஒன்றுகூடியபோது, அவர்களுடன் இருக்க அவர் விரும்பினார்.

அந்தக் காலத்தில் இருந்த தேவனுடைய மக்களைப் பற்றிச் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் தருவதற்குப் போதுமான அளவு, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நமது பாடத்தில் நாம் கடந்து வந்துள்ளோம்: முழுமை யான அளவில், இஸ்ரவேல் மக்கள் தேவபக்தியுள்ளவர்களாக இருந்தார் களா? அவர்கள் நேர்மையின் மக்களாக இருந்தார்களா? அவர்கள் தேவன்

*மீதான அன்பினாலும் விசுவாசத்தினாலும் நிரப்பப்பட்டிருந்தார்களா அல்லது ஆவிக்குரிய தன்மையில் குறைவுபட்டு, நலிவுற்ற நிலையில் இருந்தார்களா? "ஜெப ஆலயம் மாயக்காரர்களால் நிரம்பியிருப்பதால் நான் அங்கு செல்லமாட்டேன்" என்று இயேசு சுலபமாகக் கூறியிருக்க முடியும். "அவர்களைக் காட்டிலும் நான் மேன்மையானவனாக இருக்கின்றேன்!" என்று அவர் நேர்மையுடன் கூறியிருக்க முடியும் - ஆனால் அவர் அவ்வாறெல்லாம் கூறவில்லை. ஜெப ஆலயத்தில் ஆராதித்தவர்கள் தேவனுடன் பரிபூரணப்பட்ட உறவு கொண்டிருந்தார்கள் என்பதால் கிறிஸ்து ஜெப ஆலயத்திற்குச் செல்லவில்லை; மாறாக, அவர் தேவனுடன் தமது சொந்த உறவை மேம்படுத்திக்கொள்ள விரும்பியதாலேயே அங்கு சென்றார்.*

*இன்றைய நாட்களில், நாம் ஜெப ஆலயத்தில் அல்ல, ஆனால் சபையுடன் ஆராதிக்கின்றோம் - ஆனால் இன்னமும் நமக்குக் கர்த்தருடைய எண்ணப்போக்கு அவசியமாகிறது (1 பேது. 2:21). நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்காக முறைப்படி/கிரமமாக நாம் ஒன்றுகூட வேண்டியுள்ளது (எபி. 10:24, 25). நாம் உலகத்தாரால் புறக்கணிக்கப்படும்போது, கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளின் ஆதரவு நமக்கு உதவக்கூடும்.*

*4. அவர் வேதவசனங்களை அறிந்திருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. மீண்டும் ஒருமுறை, அவரை புத்தகச் சுருளை சுருட்டுபவராக, விரிப்பவராக, தாம் வாசிக்க விரும்பிய வசனப்பகுதிகளுக்குத் திருப்புபவராகச் சித்தரித்துக் காணுங்கள். இந்தக் கருத்துக்கள் எங்கு வழிநடத்துகின்றன என்பதை நீங்கள் காண்கின்றீர்களா? தேவன் நம்மைப் பெலப்படுத்துவதற்கு பல ஆதாரமூலங்களை நமக்குக் கொடுத்துள்ளார். அவர் நமக்கு, அவருடனான உறவுமுறையில் அத்தியாவசியமான ஒரு பகுதியான ஜெபத்தைக் கொடுத்துள்ளார். நாம் அவரது ஆறுதல்தரும் குரலைக் கேட்கும்படியாக வாசிப்பதற்கு அவர் நமக்கு வேதாகமத்தைக் கொடுத்துள்ளார். நாம் ஒன்றுகூடவும் ஒருவர் மற்றவரை உற்சாகப்படுத்தவும் அவர் நமக்கு வாய்ப்பைக் கொடுத்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர் பரலோகத்தின் இந்த ஆதாரமூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதில்லை. பின்பு நாம் புறக்கணிக்கப்படும்போது, ஏன் நொறுங்கிப் போய்விடுகின்றோம் என்று வியப்படைகின்றோம்.*

*5. அவர், தாம் யார் என்பதையும் தேவனுடைய திட்டத்தில் தமது இடத்தையும் அறிந்திருந்த காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது. அவரால் ஏசாயா 61ஐ வாசித்து, உண்மையில், "அது என்னைப் பற்றிப் பேசுகிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அதையே நான் செய்கின்றேன்" என்று கூற முடிந்தது. தனிப்பட்ட பாதுகாப்பின்மையினால், புறக்கணிக்கப்படுதலை நம்மால் அடிக்கடி கையாள முடியாமல் போகிறது. நாம் தேவனுடைய திட்டத்தினுள் எவ்வாறு பொருந்துகின்றோம் என்பதை எப்போதுமே நம்மால் காணமுடிவதில்லை. நாம் விசேஷித்தவர்கள், நாம் தேவனுடைய மக்கள் என்பதை நாம் உணர்ந்தறிவதில்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் தேவனுடைய ஆணாக அல்லது தேவனுடைய*

*பெண்ணாக இருக்கின்றீர்கள், உங்கள் வாழ்விற்குத் தேவன் ஒரு திட்டம் கொண்டுள்ளார். அந்த சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்!*

*6. அவர், புறக்கணிக்கப்படலாம் என்ற சூழ்நிலையிலும் சரியானதைச் செய்வதற்கு ஒப்புக்கொடுத்தலுடன் இருந்த காரணத்தினால், புறக்கணிக்கப் படுதலை அவரால் கையாள முடிந்தது.* அவர் நாசரேத்தூர் மக்களுக்கு உரையாற்றியபோது, தாம் கூறவேண்டியிருந்ததை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்கான தனிப்பட்ட சாத்தியக் கூற்றினை அவர் அறிந்திருக்க வேண்டியதாயிருந்தது - ஆனாலும் அவர் அதை எப்படியோ உரைத்துவிட்டார். நாம் புறக்கணிக்கப்பட்டால் மற்றும் புறக்கணிக்கப்படும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ, அதைச் செய்துள்ளோம் என்று அறிவதில் ஆறுதல் உள்ளது.

*7. அவர், புறக்கணிக்கப்படுதல் தம்மை வெளியேறிவிடுமளவுக்கு ஊக்கம் இழக்கச் செய்வதற்கு ஒருக்காலும் அனுமதிக்காத காரணத்தினால், புறக்கணிக்கப்படுதலை அவரால் கையாள முடிந்தது.* விசுவாசமற்ற பல கிறிஸ்தவர்கள் இந்தப் பாடத்திலிருந்து பயனடைய முடியும்.

உலகத்தினால் புறக்கணிக்கப்படுதல் பற்றியே நான் இந்தப் பிரசங்கத் தின் மூலம் வலியுறுத்துகின்றேன். நமது வேதபாடப் பகுதியில், இயேசு உலகத்தாரால் அல்ல ஆனால் தேவனுடைய மக்கள் என்று உரிமைகோரிக் கொண்டிருந்த ஆண்கள் மற்றும் பெண்களாலேயே புறக்கணிக்கப்பட்டார். அவர் புறக்கணிக்கப்பட்டது சந்தையில் அல்ல ஆனால் தேவனுடைய ஆராதனைக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு கட்டிடத்திலேயே புறக்கணிக்கப்பட்டிருந்தார்.

ஒரு காலத்தில் தங்கள் ஆராதனையிலும் கர்த்தருக்கான ஊழியத்திலும் உண்மை நிறைவுடன் இருந்த பல கிறிஸ்தவர்களை எனக்குத் தெரியும். பின்பு, மற்ற கிறிஸ்தவர்களால் அவர்கள் "உணர்வுகள் புண்படுத்தப் பட்டவர்கள்" ஆனார்கள். இதன் விளைவாக, அவர்கள் "சபையை விட்டுச் சென்றுவிட்டார்கள்." அவர்கள் இனிமேல் கர்த்தருடைய மக்களுடன் ஒன்றும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சபதம் செய்துள்ளார்கள்.

தேவனுடைய மக்களால் இயேசு புறக்கணிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் அவரைக் கொலை செய்யவும் முயற்சி செய்தார்கள். நான் அறிந்துள்ள வரையில், நான் சந்தித்துள்ள அவிசுவாசமான கிறிஸ்தவர்கள் எவரும் சபையின் மற்ற உறுப்பினர்களால், உயிரைப் பறித்துவிடப் போவதாகப் பயமுறுத்தப்பட்டிருக்கவில்லை. இது அவருக்கு [இயேசுவுக்கு] பொது ஆராதனையில் வெறுப்பை ஏற்படுத்திற்றா? அவர் இனி ஒருக்காலும் ஜெப ஆலயத்தில் மீண்டும் ஆராதிக்கக்கூடாது என்று முடிவு செய்தாரா? அவர், "நான் அங்கிருப்பதை அவர்கள் விரும்பவில்லையென்றால், அது எனக்கு நல்லதே" என்று கூறினாரா? லூக்காவினால் பதிவுசெய்யப்பட்ட அடுத்த வரலாற்றில், கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்திற்குச் சென்றார் (4:31, 33).[19] ஒரு ஜெப ஆலய ஆராதனையில் அவர் புறக்கணிக்கப் பட்ட பின்பு அவர் இன்னொரு ஜெப ஆலய ஆராதனைக்குச் சென்றார்! சரியானவற்றைச் செய்வதற்கான கர்த்தரின் உறுதிப்பாட்டை, மனித பலவீனம் எதுவும் பாதிப்பதற்கு அவர் அனுமதிக்கவில்லை.

*புறக்கணிக்கப்படுதல் உங்களை எவ்வளவோ கலக்கம் அடையச் செய்தாலும், அது உறக்கமற்ற எத்தனையோ இரவுகளை உண்டாக்கியிருந் தாலும், எந்த ஒரு மனிதரும் நீங்கள் யாராயிருக்க வேண்டுமோ அதிலிருந்தும், நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதிலிருந்தும் உங்களை ஒருக்காலும் விலக்கி வைத்து விடக்கூடாது என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். கர்த்தருக்காக அவ்விதமான ஒப்புக்கொடுத்தலின் உறுதிப் பாட்டுடன், உங்கள் வாழ்வு கொண்டுவருகிற எவ்விதப் புறக்கணிக்கப் படுதலையும் நீங்கள் கையாள முடியும். என்னுடன் சேர்ந்து பின்வருமாறு ஜெபியுங்கள்:*

> *பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, எங்களை அழிப்பதற்கும், கிறிஸ்துவுக்குள்ளான எங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் அழிப்பதற்கும் பிசாசானவன் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்கின்றான் என்று நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். அவன் எங்களை ஊக்கம் இழக்கச் செய்ய முயற்சி செய்வதையும், உமது வழியிலிருந்து திரும்பும்படி எங்களைத் தூண்டுவதையும் நாங்கள் அறிகின்றோம். எங்கள் சிந்தைகளின்மீது சாத்தான் அவ்விதமான பிடியைக் கொண்டிராதபடி எங்களை நீர் பலப்படுத்தும். உம்மில் அன்புகூரவும், நீர் எங்களுக்குச் செய்துள்ளதை மதிக்கவும் எங்களுக்கு உதவும். நாங்கள் புறக்கணிக்கப்படும்போது, அது எங்களை அழிக்காத படி அல்லது எங்களைத் தடுத்து நிறுத்தாதபடி, உம்முடன் எங்களுக் குள்ள உறவைப் பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்.*

## *முடிவுரை*

*புறக்கணிக்கப்படுதலை வெற்றி கொள்வதற்கு, உங்களுக்குக் கர்த்தருடன் ஒரு விசேஷித்த உறவுமுறை தேவைப்படுகிறது. அந்த உறவுமுறை ஞானஸ்நானத்தில் தொடங்குகிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, தேவனுடைய ஆவியானவர் இயேசுவின்மீது இறங்கி வந்தார், தேவன் அவரைத் தம்முடைய குமாரன் என்று ஒப்புக்கொண்டார்/ அறிவித்தார் (மத். 3:16, 17). நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, தேவன் தமது ஆவியை உங்கள் இருதயங்களுக்குள் அனுப்புகின்றார் மற்றும் அவர் உங்களைத் தமது மகன்/மகள் என்று அழைக்கின்றார் (அப். 2:38; கலா. 4:6, 7).[20] நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்பு, கர்த்தருக்கு உண்மையுடன் இருப்பதன்மூலம் அந்த உறவை நீங்கள் பராமரித்து காத்துக்கொள்ள வேண்டும். அந்த வழிமுறையில் மட்டுமே நீங்கள் புறக்கணிக்கப்படுதலைக் கையாளப் போதுமான பெலத்துடன் இருப்பீர்கள்.*

*நீங்கள் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் தேவனுடைய பிள்ளையாகி இருக்கின்றீர்களா? நீங்கள் ஏற்கனவே தேவனுடைய பிள்ளையாக இருந்தால், நீங்கள் புறக்கணிக்கப்பட்ட விஷயமானது உங்களை அவிசுவாசமானவராக அல்லது கனிகொடுக்காதவராக ஆக்குமளவுக்கு ஊக்கம் இழக்கச் செய்திருக்கிறதா? இயேசு, “ஆத்துமாவைக்*

*கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்று கூறினார் (மத். 10:28). கிறிஸ்துவின் சிந்தனையை நான் ஏற்புடையதாக்குகின்ற நிலையில் இருந்தால், பின்வருவதை இத்துடன் சேர்க்க அனுமதியுங்கள்: "இவ்வாழ்வில் மட்டும் உங்களைப் புறக்கணிக்கக் கூடியவர்களுக்குப் பயப்பட வேண்டாம், நித்தியத்திற்கும் உங்களைப் புறக்கணிக்கக் கூடியவருக்கே பயப்படுங்கள்.'' நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தால் (கலா. 3:26, 27) அல்லது "ஆதியில் நீங்கள் கொண்டிருந்த அன்பை" மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தால் (வெளி. 2:4), உங்கள் கீழ்ப்படிதலை - ஒரு கணம்கூட - தாமதப்படுத்தாதீர்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]எரேமியா 20:7, 8ஐக் காணவும். எரேமியாவின் புத்தகத்தில் குறைந்தபட்சம் ஐந்து "முறையீட்டுப் பகுதிகள்" உள்ளன. [2]புறக்கணிக்கப்படுதலுக்கு என்னுடைய உதாரணங்களுக்குப் பதிலாக நீங்கள் உங்கள் சொந்த உதாரணங்களைப் பயன்படுத்த விரும்பலாம். [3]மத்தேயும் மாற்குவும் மாறுபட்ட நிகழ்வைச் சித்தரிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் நான், இம்மூவருமே ஒரே நிகழ்வைப் பற்றிப் பேசுகின்றார்கள் என்றே நினைக்கின்றேன். (இதற்கு முந்திய பாடத்தின் கடைசிப் பகுதியில் உள்ள கலந்துரையாடலை மறு கண்ணோட்டமிடவும்.) [4]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில், "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்திலும், "தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன்?" என்ற பிரசங்கத்திலும், நாசரேத்தூர் பற்றிய விளக்கங்களைக் காணவும். [5]Shema என்பது "காதால் கேள்" என்று அர்த்தப்படும் எபிரெய வார்த்தையாக உள்ளது, இது தன் மிகக் குறுகிய கருத்தமைவில் உபாகமம் 6:4ஐக் குறிக்கிறது. அன்றாட ஜெபத்தில் உச்சரிக்கப்படும்போது, ஷேமாவானது உபாகமம் 6:4-9 மற்றும் 11:13-21, எண்ணாகமம் 15:37-41 மற்றும் பல கூடுதலான ஆசீர்வாதங்களை உள்ளடக்குகிறது. [6]''பணிவிடைக்காரன்,'' ''ஊழியன்'' மற்றும் ''உதவியாள்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''கீழ்வரிசையாளர்'' என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இது தோற்றப் பொருளில், பெரிய துடுப்புகளினால் வலிந்து செலுத்தப்பட்ட கப்பல்களில் கீழ்த்தளத்திலிருந்து வேலை செய்யும் துடுப்பு வலிப்பவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இது கடினமான, மதிக்கப் படாத வேலையைச் செய்த ஒருவரைக் குறிக்கப் பயன்பட்டிருந்தது. [7]இம்மனிதர் ''ஜெப ஆலயத் தலைவர்'' அல்ல (லூக். 8:41;* KJV*); அது வேறொரு பணிப்பதவியாயிருந்தது. ஜெப ஆலயத்தின் "அதிகாரிகள்" அல்லது "அலுவலர்கள்" பற்றிய விவரத்திற்கு "நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?" என்ற பாடத்தின் தொடக்கப் பகுதியில் காணவும். [8]இருதயம் உடைந்தவர்களை மேசியா குணமாக்குதல் பற்றிய ஒரு சொற்றொடரை* KJV *கூடுதலாகக் கூறுகிறது. இது லூக்காவின் மேற்கோளை ஏசாயா 61:1க்கு மிகவும் நெருங்கி உறுதிப்படுத்துவதற்காகக் கூட்டப்பட்டிருக்கலாம். அந்தச் சொற்றொடர், லூக்கா சுவிசேஷத்தின் மூலவசனப் பிரதிகளில் காணப்படவில்லை யென்றாலும், இதுவும் மேசியா செய்ய வேண்டிய ஒரு ஊழியமாகவே இருந்தது. [9]இவ்விடத்தில் நீங்கள் சற்றே நிதானித்து, மேசியா*

*"தரித்திரர்," "சிறைப்பட்டவர்கள்," "பார்வையற்றவர்கள்," "ஒடுக்கப்பட்டவர்கள்" ஆகியோர்மீது அக்கறையாக உள்ளார் என்று குறிப்பிட விரும்பலாம். இப்படிப்பட்ட மக்கள்மீது அவர் ஆர்வம் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, நாமும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறது. [10]அந்த ஆண்டு பற்றிய அடிப்படைப் போதனைக்கு லேவியராகமம் 25 மற்றும் 27ம் அதிகாரங்களைக் காணவும்.*

*[11]அவர்கள், "இவன் தச்சனல்லவா? ..." (மாற். 6:3) என்று கேட்டார்கள். இயேசுவின் சட்டப்பூர்வமான தந்தை ஒரு தச்சராக இருந்தார் என்பதோடு, அவரும் (இயேசுவும்) தாமே அத்தொழிலைக் கற்றுக்கொண்டார். [12]கப்பர்நகூம் நாசரேத்தூரின் வடகிழக்குப் பகுதியில் இருந்தது. இக்குறிப்புகளுக்குப் பின்பு உள்ள வரைபடத்தில் காணவும். [13]நமது ஒப்பீட்டில், நாம் லூக்கா 4ன் நிகழ்ச்சியை 7 மற்றும் 8 ஆகியவற்றின் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு வைத்திருக்கின்றோம். [14]இயேசுவின் விவரிப்பானது, தேவன் புறஜாதியார் மீதும் அக்கறையுடையவராக இருக்கின்றார் என்று காண்பிக்கின்றன, இது மேசியா யூதர்களுக்காக மட்டுமின்றி புறஜாதியாருக்காகவும் வந்தார் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. [15]இதை, சனதெரீன் சங்கம் ஸ்தேவானின் உரைக்குப் பதில்செயல் செய்த விதத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள் (அப். 7:54, 57-59அ). [16]அவர் ஒரு அற்புதத்தை நிகழ்த்தியிருந்தால், அவர்கள் தாங்கள் கேட்டதைப் பெற்றிருப்பார்கள் ஆனால் தாங்கள் விரும்பியதைப் பெற்றிருக்க மாட்டார்கள். [17]அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்தார்கள்; இப்போது அவர் அவர்களைப் புறக்கணித்தார். [18]எனது கருத்துக்கள் நமது வேத பாடப்பகுதியை முற்றிலும் எடுத்துரைத்து முடிப்பதில்லை. இவ்வசனப் பகுதியின்மீது நேரம் செலவிட்டு, இயேசு புறக்கணிக்கப்படுதலை எவ்வாறு சந்தித்தார் என்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் அநேகமாக கூடுதலான சிந்தனைகள் கிடைக்கப்பெறுவீர்கள். [19]நமது ஒப்பீட்டில், நாம் லூக்கா 4:31ல் தொடங்கும் வரலாற்றை இயேசுவின் வாழ்வின் முற்பகுதியில் வைத்துள்ளோம், ஆனால் நான் இங்கு குறிப்பிடும் கருத்து இன்னமும் மதிப்புள்ளதாக இருக்கிறது. [20]நாம் ஞானஸ்நானம் பெறும்போது ஆவியானவரைப் பெறுவதற்கும், இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது ஆவியானவரைப் பெற்றதற்கும் இடையில் ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது. அவருக்குக் கிடைத்த கொடையானது அவர் அற்புதங்கள் நிகழ்த்துதலுடன் தொடர்புடையதாயிருந்தது, நாம் ஆவியானவரைப் பெற்றுக்கொண்டது அற்புதங்கள் செய்வதற்காக அல்ல. இருந்தபோதிலும், இரு நிகழ்வுகளும் ஆர்வத்திற்குரிய சில இணைவுகளைக் கொண்டுள்ளன.*